வினாக்கள்—விடைகள் பட்டியல்களில் உடுக்குறியிடாத வினாக்களின் எண்கள் மற்றும் உறுப்பினர் பெயர் ஆகிய விவரங்களை மட்டும் உள்ளடக்கிய அட்டவணைப் பட்டியல்கள் தயார் செய்யப்பட்டு, அவற்றின் மென்பொருள் வடிவம் PDF முறையில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகளின் நகல்கள் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பெறும் என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். 2018—2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 10 முதல் 12 வரையிலான 3 அறிக்கைகள், பொதுக் கணக்குக் குழுவின் 105 முதல் 128 வரையிலான 24 அறிக்கைகள், பொது நிறுவனங்கள் குழுவின் 104 முதல் 111 வரையிலான 8 அறிக்கைகள் மற்றும் பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கை பேரவைக்கு அளிக்கப்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இன்றைய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அவைமுன் வைக்கப்பெறும் ஏடுகளில் உள்ள 3 அறிவிக்கைகள் மற்றும் 11 ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள் ஆகியவற்றின் மென்பொருள் நகல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேற்குறிப்பிட்ட உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல்கள், குழுக்களின் அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள், ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் ஆகியவற்றின் தலா 5 பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.

2020 பிப்ரவரி 20]

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழரைக் கோடி தமிழ் மக்களுடைய நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்து வாழ்ந்துகொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழுக்கு பெருமை சேர்க்கின்றவகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அம்மா அவர்களுடைய 72–வது பிறந்த நாளை மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாக அறிவித்திருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறுபான்மையின மக்களுடைய பாதுகாப்பிற்கு பெருமை சேர்க்கின்றவகையில், உலமாக்களுடைய ஊதியத்தை 3,000 ரூபாயாக உயர்த்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், ஹஜ் பயணிகளின் தங்கும் விடுதிக்காக 15 கோடி ரூபாயை தாயுள்ளத்தோடு ஒதுக்கித் தந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை வழி நடத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளையும், வணக்கத்தினையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் 2018–2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவினுடைய 10 முதல் 12 வரையிலான 3 அறிக்கைகளை இக்குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம் போல் நான் சொல்லவில்லை, நான் நேரடியாக* subject*–க்கு வந்துவிடுகிறேன். 2018–2020 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 105 முதல் 128 வரையிலான 24 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

[2020 பிப்ரவரி 20

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. S. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மேலான அனுமதியோடு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2020 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 104 முதல் 111 வரையிலான 8 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

பிற்பகல் 12–35

(ஈ) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. ப. சத்திய நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும், இந்த ஆட்சியும் இயக்கமும் மக்களுக்காகவே பணியாற்றும் என்று கூறி மறைந்த எங்கள் இதய தெய்வம் சமூக நீதி காத்த வீராங்கனை, தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் மூன்றாண்டு காலமாய் முத்திரை பதித்த நல்லாட்சி நடத்தி நான்காம் ஆண்டில் தர்மத்தின் தாயின் தவ வழியில் நடக்கும் எங்கள் அண்ணன், தங்கத் தாயின் பாசறையில் பயின்ற எங்கள் அண்ணன், அம்மாவின் அரவணைப்பில் வளர்ந்த விவசாய தங்க மகன், தமிழ்நாட்டிற்குக் கிடைத்த தவப் புதல்வன், மத்திய அரசின் நிருவாகத் திறனுக்கான பட்டியலில் முதலிடம் பிடித்து, (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி பாயும் டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண்மை மண்டலமாக அறிவித்து, விவசாயிகளின் வயிற்றில் பாலை வார்த்து, எந்தவொரு சூழ்நிலையிலும் சாதாரண ஏழை மக்களுக்கு பாதிப்பு வந்துவிடக் கூடாது என்று சத்துணவு தந்த சரித்திர நாயகன்,

2020 பிப்ரவரி 20] [திரு. ப. சத்திய நாராயணன்]

புன்னகை மன்னன், பூவிழி கண்ணன், பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழியில் (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளின் சிம்ம சொப்பனமாய், மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான் என்று வாழ்ந்து மறைந்த புரட்சித் தலைவி அம்மா வழியில் விவசாயிகள், நெசவாளர்கள், மாணவர்கள், மகளிர், பழங்குடியினர் என்று அத்தனை பிரிவு மக்களுக்கான சாமானியர்களின் ஆட்சியை நடத்தி வரும், எதிரிகள் மூக்கின்மேல் விரல் வைத்து வியக்கும் வண்ணம் நயவஞ்சகத்தை வேரறுத்து, நிலையான ஆட்சி நடத்தி வரும் எங்கள் பாசமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவரோடு துணை நின்று செயலாற்றி வரும் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னுடன் இணைந்து பணியாற்றிக்கொண்டிருக்கிற அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2020 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி, வணக்கம்.

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் விவசாயியாக இருந்து, இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சட்டமுன்வடிவை அவையில் தாக்கல் செய்வதை மிகவும் பெருமையாகக் கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாய்ப்பை, இறைவனாகக் காட்சியளிக்கின்ற